**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**
**வழக்கு எண்: CC –12/2021**

**வழக்கு சாட்சி : LW16(PW5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வீரமணி | தொழில் | : | காவல் ஆய்வாளர், குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறை தூத்துக்குடி |
| தந்தை பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**எதிரி ஆஜர் .**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 02 nd day of February 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar Card of the Witness verified.**

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–</u>**

1. நான் தற்போது காவல் ஆய்வாளராக குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறை தூத்துக்குடியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.06.2020 ம் தேதி நான் அன்னவாசல் காவல் நிலையத்தில் நான் காவல் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபொழுது, புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி தாலுகா, கொன்னப்பட்டியைச் சேர்ந்த ராஜாங்கம் மனைவி பரமேஷ்வரி , வயது 30 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரினைப் பெற்று நிலையக்குற்ற எண். 287/2020 , இதசபிரிவுகள் 304(A) IPC ன் பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவினை நீதித்துறை நடுவர் இலுப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைத்து காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வழக்கின் கோப்பினை ஒப்படைத்தேன். என்னால் பதிவு செய்யப்பட்ட **முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3/PW5) ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை ஆய்வாளர் விசாரித்தார்.**

எ.த.கு.வி

1. அ.சா.1 எழுத்துப்பூர்வமாக கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். அ.சா.1 எழுத்துப்பூர்வமாக கொடுத்த புகாரில் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் நான் இல்லை என்றாலும், வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சம்பவத்தை பார்த்தவர்கள் கூறியதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா. 1 கொடுத்த புகாரில் அந்த விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி புதுக்கோட்டையில் இருந்து குடுமியான்மலை சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சம்பவம் தொடர்பாக நீங்கள் நேரடியாக சம்பவ இடத்தை பார்வையிட்டு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. அ.சா. 1 கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரின் முதல் பக்கத்திலோ அல்லது இரண்டாவது பக்கத்திலோ எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என தேதி குறிப்பிடப்பட்வில்லை என்றால் புகார் அளிக்கப்பட்டுள்ள சாரம்சத்தில் இன்று 02.06.2020 ம் தேதி மாலை 04.15 மணி என்று குறிப்பிட்டுள்ளார். பொதுவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் கொடுக்க வேண்டும் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து 24 மணி நேரத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற தகவல் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கடந்த 02.06.2020 ம் தேதி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 13 நாட்கள் காலதாமதமாக 15.06.2020 ம் தேதி தான் வரப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. இந்த 13 நாட்கள் காலதாமதம் குறித்து புலன் விசாரணை அதிகாரி என்னிடம் விசாரித்து அதற்கான காரணம் ஏதேனும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. அ.சா.1 கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரில் விபத்தில் இறந்து போன குழந்தை ரோட்டின் வடபுறத்தில் இருந்து தென்புறமாக வந்து எந்த திசையில் நடந்து சென்றதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாலையை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி கடந்து சாலையின் இடதுபுறமாக வந்ததாக மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடம் மக்கள் நடமாட்டம் உள்ள இடம் மற்றும் வளைவான பகுதி என்றால் நான் சம்பவம் இடம் செல்லாததால் இது பற்றி தெரியாது. அ.சா. 1 கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரில் உள்ள கையெழுத்திற்கும், நீதிமன்றத்தில் அ.சா.1 செய்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் நான் கையெழுத்து நிபுணர் இல்லாததால் அது குறித்து எனக்கு தெரியாது.

4. அ.சா. 1 நிலையம் ஆஜராக எந்தவிதமான எழுத்துப்பூர்வமான புகாரையும் கொடுக்கவில்லை என்றாலும், அரசு தரப்பு சான்றாவணம் 1 ல் உள்ள கையெழுத்தும், அ.சா. 1 ன் நீதிமன்ற வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தும் வெவ்வேறாக உள்ளது என்றாலும், விபத்தில் இறந்து போன குழந்தையின் பெற்றோர்களுக்கு ஆதரவாக முறையான முதல் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை

செய்திருந்தால் விபத்து சம்பவத்திற்கு யார் காரணம் என்ற விவரம் தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல.